# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி **D.A.ஜோசப்**, பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Cell. 9600824414
Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com

'என் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்றார் வள்ளுவர். செய்ந்நன்றி மறத்தல் மன்னிக்க முடியாத பாவம். அதனால் தானோ என்னவோ நம்மில் பலருக்கு அது மிகவும் விருப்பமாக இருக்கிறது. இறந்து போன தம் முன்னோர்களைப் பற்றி நன்றியோடு நினைத்துப் பார்ப்பது பலருக்குப் பிடிப்பதில்லை. ஆனால் இந்த விஷயத்தை கருடாழ்வார் அவ்வளவு சுலபமாக விடுவதாக இல்லை. "இவ்வுலகை நீத்த ஆத்மாக்கள் எங்கே போகின்றன? இங்கே பூமியில் உள்ளவர்கள் அப்படிப் போனவர்களுக்கு ஏதாவது செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்களா?" என்பது மாதிரியான சில கேள்விகளைக் கருடன் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனிடம் ஒருநாள் கேட்டு வைத்தார்.

இதை நான் சொல்லவில்லை. கருட புராணம் சொல்லுகிறது. பலர் நினைப்பது போல் கருடபுராணம் என்பது கருடனுடைய பிறப்பு வளர்ப்பைச் சொல்லும் கருடனுடைய வரலாறு அல்ல. கருடன் கேள்வி கேட்க பெருமாள் பதில் சொல்ல என்று இவ்விருவருடைய உரையாடலாக அமைந்தது இந்நூல். கேள்விகளைக் கேட்டு இந்நூல் தோன்றக் காரணமாய் இருந்த பெருமை கருடனைச் சேரும் ஆதலால் அவர் பெயரால் இப்புராணம் அழைக்கப்படுகிறது. இவ்விருவரின் கேள்வி பதில்களை சூத மாமுனிவர் நைமிசாரண்யத்தில் உள்ள மற்ற முனிவர்களுக்கு சொல்வதாகப் இப்புராணம் அமைந்துள்ளது.

ஆன்மிகத்தினுடைய அடிப்படையே ஆத்மா இறந்த பிறகு அடையும் கதியைப் பற்றிச் சிந்திப்பதுதான். ஆத்மா வேறு, சரீரம் வேறு என்று நினைக்கத் தொடங்கும் போது தானே லோகாயதம் முடிந்து வேதாந்தம் தொடங்குகிறது! வேதங்களுக்கு அதி தெய்வமாகச் சொல்லப்பட்ட வேத புருஷனான பட்சி ராஜன் பெருமாளிடம் "உலகத்தில் ஜீவர்கள் பிறக்கக் காரணம் என்ன? மரித்த பிறகு அவர்கள் எங்கே போகிறார்கள்? சொர்க்க நரகங்கள் ஏன் அடையப்படுகின்றன? இறந்தபிறகு ஆத்மா என்ன நிலையை அடைகிறது? அந்த நிலையில் அந்த ஆத்மா சாந்தி அடைய என்ன செய்ய வேண்டும்?" என்று அடுக்கடுக்காகப் பல வினாக்களைத் தொடுத்தார். இவற்றுக்கான விடைகள் அவர் அறியாதன அல்ல. நமக்காகக் கேட்டார். நாம் புராணவடிவில் இவற்றைப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகப் பரோபகாரமாகக் கேட்டார்.

அந்தப் பரோபகாரிக்கு உலகநாடக சூத்ரதாரி சொன்ன பதில்களில் மனித குலத்தின் உய்வே அடங்கி இருக்கிறது. உயிர்களின் மேல் இரக்கப்படுவதும் அவற்றின் துன்பம் தீர்க்கப் பிரயத்தனப் படுவதும் பகவானுக்கு சொரூபம் அல்லவா? அதனால் அவன் விடைகளை விளக்கமாக சொன்னான்.பொறுமையாகச் சொன்னான். அவன் காட்டிய வழியில்தான் மனிதகுலம் இன்றுவரை சிரார்த்தம், தர்ப்பணம், ஆகியவற்றைச் செய்து வருகிறது. இந்த கருடபுராணம் அதிகம் பேசப்படுவது கூட யாராவது ஒருவர் இறக்கும் போதுதான். இறந்தவர்கள் வீட்டில் இருக்கிறவர்களுக்கு இந்தப் புராணத்தை எடுத்துக் கொடுத்துப் படிக்கச் சொல்லுவார்கள். அப்பொழுது தான் இறந்தவர்களுக்கு உரிய சாந்தி கிரியைகள் செய்யப்படும் என்ற நல்ல எண்ணத்தோடுதான். அதைப் புரிந்து கொள்ளாமல் சிலர் இதை சாவுப் புராணம் என்றும், அமங்கலப் புராணம் என்றும், ஒதுக்கி வைத்தார்கள். உபந்யாஸத்தில் கூட இதைக் கேட்க அஞ்சி ஓடினார்கள்.

ஆனால் உண்மையில் இது அமங்கலம் நீக்கி ஆத்மாவுக்கு மங்கலம் தருவது. அனைவரும் தெரிந்து வைத்திருக்க வேண்டியது. ஏனென்றால் செத்தவர்களுக்கு சாந்தி செய்யும் போது நன்மை மரித்தவர்களுக்கு மட்டுமல்ல. சாந்தி செய்பவர்களுக்கும் தான். பசித்தவர்களுக்குச் சோறிட்டால் உண்பவர்கள் பசி தீர்வது போல உணவு கொடுத்தவர்கள் புண்ணியத்தை அடைகிறார்கள் அல்லவா? அதைப் போலத் தான் இதுவும்! அதனால்தான் காரணமின்றிப் பலரால் ஒதுக்கப்பட்ட இந்தக் கருட புராணத்தைக் கட்டுரை வடிவில் தர முடிவெடுக்கப்பட்டது.

இந்தப் புராணத்தில் ஓரிடத்தில் சொல்லப்பட்டிருப்பது போல், இறந்தவர்களுக்கு சாந்தி செய்கிறவர்கள் ஆயுள், ஆரோக்யம், ஐஸ்வர்யம், வம்ச விருத்தி, புகழ் ஆகியவற்றை அடைகிறார்கள். இதைச் செய்யாமல் புறக்கணிக்கிறவர்கள் உடலில் நோய்களையும் வாழ்வில் நொடிப்புகளையும் அடைகிறார்கள். இன்றைய உலகின் பெரும்பாலான பிரச்னைகள் கருட புராணத்துக்குக் கீழ்ப் படிவதால் தீரும். திரும்பும் இடமெல்லாம் மருந்துக் கடைகளும், மருத்துவ மனைகளும் மலிந்து போன இன்றைய சமுதாயத்தில் இந்த அலங்கோலங்கள் மறைந்து உடல் நலமும் மனநலமும் பெருகும்.

கடந்த நூறு ஆண்டுகளாக கருட புராணம் சற்று அதிகமாகவே மறக்கப் பட்டிருக்கிறது, ஒதுக்கப்பட்டிருக் கிறது. சென்ற நூற்றாண்டில் இல்லாத அளவு தேக வியாதிகளும் மன வியாதிகளும் சமூகத்தில் பெருத்துப் போனதற்கு இது தான் காரணம். அந்தக் குறை நீக்க, இனி வரப்போகும் கட்டுரை களில் கருட புராணத்தை ஒவ்வொரு அத்யாயமாக எடுத்து அதன் சாரத்தை இன்றைய எளிய தமிழில் உங்கள் முன்பு வைக்கத் தீர்மானித்து அக்காரியம் ஈடேற எம்பெருமானின் அருளை யாசித்து நிற்கிறேன். இக் காரியம் இனிதே நிறைவேற நீங்களும் வாழ்த்துங்கள்.

(தொடரும்)